# ரோக்மா இலவச அஞ்சல்வழி வேதாகமக் கல்வி

*தபால் பெட்டி எண் - 9,* No.*8, பாரதியார் 2 வது தெரு,* S.S. *காலனி மதுரை – 10.* Ph. 0452 – 4354302


## வேதாகமத்தின் யுகங்கள்

**முன்னுரை :**

வேதத்தை படிக்கும்பொழுது சரியான வியாக்கியானம் செய்யும் முறையில் அணுகவேண்டும். அப்பொழுதுதான் அதனுடைய பொருளை இலகுவாகவும், தெளிவாகவும் அறிந்துகொள்ளமுடியும். அதுமட்டுமன்றி அதனுடைய உண்மையான பொருளை திரித்துக் கூறாமலும் இருக்கமுடியும். ஆயிரவருட அரசாட்சி இல்லை என்று சொல்பவர்கள் வேதத்தை யுகங்களின் அடிப்படையில் பகுத்துப் படிப்பது சரியில்லை என்று வாதிக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய கேள்விக்குப் பதில் கொடுக்க நாங்கள் முணைந்துள்ளோம். வேதத்தை யுகங்களின் அடிப்படையில் படிக்கும் பொழுதே ஒருவர் வேதத்தை சரிய அறிந்துகொள்ள முடியும். மேலும், வேதம் பிழையற்றது, சரியானது என்று ஆணித்தரமாக யுகவாதிகள் அதாவது வேதத்தை யுகங்களின் அடிப்படையில் படிக்க வேண்டுமென்று விரும்புகிறவர்கள் கூறுகிறார்கள். இப்பாடத்தில் யுகங்களின் அடிப்படையில் வேதத்தைப் படிப்பதே சிறந்த முறை என்று அதற்கான விளக்கத்தைக் கொடுப்பதே எங்களது நோக்கம். குறிப்பாக வேதம் சரியானது, பிழையற்றது என்று ஏற்றுக் கொள்ளக்கூடியவர்களுக்கும், கிறிஸ்து உபத்திரவக்காலத்திற்கு முன்பு வந்துவிடுவார் என்று நம்புகிறவர்களுக்கும் இப்பாடம் பிரயோஜனமாக இருக்கும்.

### இப்பாடத்தின் முக்கியத்துவம் :

வேதாகமத்தை யுகங்களின் அடிப்படையில் படிக்கவேண்டுமென்று சொல்பவர்கள் கருதுவது, தேவன் தம்மைக் குறித்ததான உண்மையை முழுமையாக ஆதாம், நோவா, ஆபிரகாம், மோசே. தீர்க்கதரிசிகள் முதலானோருக்கு வெளிப்படுத்தவில்லை. வேதத்தில் காணப்படக்கூடிய சத்தியமானது படிப்படியாக வெளிப்படுத்தப்பட்டது. புதிய ஏற்பாட்டோடு தேவனுடைய வெளிப்பாடு நிறைவு பெறுகிறது. எனவே வேதாகமத்தை யுகங்களின் அடிப்படையில் படிப்பதே சரியான முறையாகும். இம்முறையைப் பின்பற்றி வேதத்தைப் படிக்கும்பொழுது மட்டுமே வேதவசனங்களை இலகுவாகவும், தெளிவாகவும் அறிந்துகொள்ளமுடியும். அதுமட்டுமின்றி, வேதாகமம் ஒரு ஜீவனுள்ள புத்தகமாக இருக்கிறது என்பதையும் அறிந்து கொள்ளலாம். சபையானது உபத்திரவ காலத்திற்கு முன்பு எடுத்துக்கொள்ளப்படும் என்றும், கிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்து ஆயிரவருட அரசாட்சியை ஸ்தாபிப்பார் என்றும் நம்புகிறவர்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்தவும், வேதாகமத்தை தெளிவாக அறிந்துகொள்ள வேண்டுமென்று விரும்புகிறவர் களின் விசுவாசத்தை ஸ்திரப்படுத்துவதுமே இப்பாடத்தின் முக்கிய நோக்கமாகும்.

**பாடம்**

### I. யுகங்களின் கொள்கை என்றால் என்ன?

1. ஆதாமிலிருந்து கிறிஸ்து வரைக்கும் சத்தியமானது படிப்படியாக வெளிப்படுத்தப்பட்டது. பழைய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் அல்லது தீர்க்கதரிசிகள் தேவனைக் குறித்ததான உண்மை முழுவதையும் தெரிந்திருக்க வில்லை.
2. தேவன் தம்மைக் குறித்ததான உண்மையை பல பகுதிகளாக பல்வேறு காலங்களில் மனிதனுக்கு வெளிப்படுத்தினார். அந்தந்தக் காலங்களில் கொடுக்கப்பட்ட வெளிப்படுத்தலுக்குத்தக்கதாக மனிதன் கீழ்படிய வேண்டியவனாக இருக்கிறான். இதுவே யுகங்களின் கொள்கையாகும்.

### II. யுகம் என்றால் என்ன?

i) யுகம் என்ற வார்த்தையின் பொருள் பங்கிடுதல் என்பதாகும். இதனுடைய கருத்து நிர்வாகம் செய்தல் அல்லது வரிசைப்படுத்துதல் என்பதாகும்.

ii) வெப்ஸ்டர் அகராதி யுகம் என்பதற்கு ‘தெய்வீக ஒழுங்குமுறை’ என்று பொருள்கொடுக்கிறது.

iii) ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதி யுகம் என்பதற்கு இவ்விதமாக விளக்கம் கொடுக்கிறது: அதாவது யுகம் என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தின் தேவைக்கு ஏற்றாற்போல கொடுக்கப்படும் வெளிப்படுத்தலாகும்.

iv) சி.ஐ. ஸ்கோபீல்டு அவர்கள் யுகம் என்பதற்கு கீழ்க்கண்டவாறு விளக்கம் கொடுக்கிறார்: யுகம் என்பது ஒரு வரையறுக் கப்பட்ட காலம். அந்த வரையறுக்கப்பட்ட காலத்தில் மனிதன் எந்த அளவிற்கு தேவனுடைய வெளிப்படுத்தப்பட்ட சித்தத்திற்கு கீழ்ப்படிதல் உள்ளவனாய் இருக்கிறான் என்பதை சோதிப்பது ஆகும். இரட்சிப்புக்கான வழி எப்போதும் ஒன்றாக இருந்தாலும் தேவன் மனிதரோடு செயல்படும்விதம் ஒவ்வொரு யுகத்திலும் மாறுபடுகிறது.

v) டாக்டர் கிரகம் ஸ்குரோஜி அவர்கள் யுகம் என்பதற்கு இவ்விதமாக விளக்கம் கொடுக்கிறார்: தேவன் தமக்கென்று காலங்களை வைத்திருக்கிறார். மனிதனுடைய தேவைக்கு ஏற்றாற்போல வித்தியாசமான நிலைகளில் செயல்படுகிறார்.

vi) டாக்டர் ஹாரி ஐயோர்ன்ஸைடு அவர்கள் யுகம் என்பதற்கு இவ்விதமாக விளக்கம் கொடுக்கிறார்: யுகம் என்பது ஒரு குறிப்பிட்ட ஒழுங்குமுறை அல்லது நிபந்தனை. இவை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே பொருந்தக் கூடியதாயிருக்கும். மற்ற காலங்களுக்கு இவை பொருந்துவதில்லை.

vii) வேதாகமத்தை காலத்திற்கு ஏற்றாற்போல பிரித்துப் படிப்பது தவறு என்று அநேகர் சொல்லுகிறார்கள். ஆனால் எந்த ஒரு வேதாகம மாணவனும் படிப்படியாக கொடுக்கப்பட்ட வெளிப்பாட்டையும், அந்த வெளிப்பாட்டிற்கு ஏற்றாற்போல மனிதனுடைய பொறுப்பையும் உடனடியாக அறிந்துகொள்ளமுடியும். வேதத்தில் உள்ள வெவ்வேறான காலங்களை யுகங்கள் என்று நாம் அழைக்கிறோம்.

## III. வேதாகமத்தில் யுகம் என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ள விதம் :

அ. 'Oikonomia' (ஒய்கோனோமியா) என்ற பெயர்ச்சொல் புதிய ஏற்பாட்டில் கொலோசெயர் 1:25–ல் உபயோகிக்கப்பட்டுள்ளது. இந்த வார்த்தையானது பொதுவாக 'காலம்' என்றே மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது.

ஆ. இப்பதத்தை இரண்டு உவமைகளில் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து பயன்படுத்தியிருக்கிறார். லூக்கா 12:42; 16:1,3,8. இவைகளில் இவ்வார்த்தையானது உக்கிராணத்துவம், பொறுப்பு, நிர்வாகம் என்ற வார்த்தைகளுக்குத் தொடர்பான நிலையில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இ. அப்போஸ்தலனாகிய பேதுரு தம்முடைய நிருபத்தில் இப்பதத்தை கீழ்க்கண்டவாறு பயன்படுத்தியுள்ளார். 'நல்ல உக்கிராணக்காரர் போல ஒருவருக்கொருவர் உதவி செய்யுங்கள்' (1 பேதுரு 4:10).

ஈ. யுகம் என்ற கருத்துள்ள வார்த்தையை அப்போஸ்தலனாகிய பவுல் எப்படி உபயோகித்துள்ளார்?

1. தேவனுடைய இரகசியங்களை பெற்ற உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனென்று காணப்படுவது அவனுக்கு அவசியம் (1 கொரிந்தியர் 4:1,2).
2. யுகம் முடிவுபெறக் கூடியதாகவும், காலத்தோடு தொடர்பு கொண்டதாயும் இருக்கிறது (கலாத்தியர் 4:2–5).
3. யுகங்கள் தேவனுடைய குறிப்பிட்ட வெளிப்பாட்டோடு தொடர்பு கொண்டதாய் இருக்கிறது (எபேசியர் 3:2–6).

## IV. யுகங்களின் இயல்புகள் :

ஒரு யுகம் ஐந்து பெரிய இயல்புகளைக் கொண்டதாய் இருக்கிறது.

i) தேவன் தம்மைக் குறித்து மனிதனுக்கு வெளிப்படுத்தின அந்தந்தக் காலத்திற்குரிய வெளிப்பாட்டிற்கு ஏற்றாற்போல மனிதன் நடந்துகொள்ளவேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார்.

ii) தேவ வெளிப்பாட்டிற்கு ஏற்றாற்போல மனிதனுடைய உக்கிராணத்துவம், பொறுப்பு, உண்மையுள்ள கீழ்ப்படிதல் இருக்க வேண்டும். இந்நிலையில் மனிதன் நிச்சயமாகவே பரீட்சிக்கப்படுகிறான்.

iii) ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வெளிப்படுத்தப்பட்ட தேவவெளிப்பாடும், பொறுப்பும், சேர்ந்தே காணப்படுகிறது.

iv) மனிதன் தன்னுடைய பொறுப்பை நிறைவேற்றாமல் போகும் நிலையை ஒவ்வொரு யுகத்திலும் காணலாம்.

v) மனிதன் இவ்விதமாக தன்னுடைய தோல்வியினாலே தேவனுடைய தண்டனைக்கு ஏதுவாகிறான்.

<u>குறிப்பு :</u>

1. யுகங்கள் பொதுவாக ஒரு வரையறுக்கப்பட்ட காலத்தை மாத்திரம் குறிப்பதில்லை. இரட்சிக்கப்படுவதற்கான பல்வேறு வழிகளும் அல்ல. ஆனால் வேதவரலாற்றில் தெளிவாக உணர்ந்து கொள்ளக்கூடிய பல்வேறு நிர்வாகங்களாகும். தேவன் தம்முடைய சித்தத்தையும், உண்மையையும் வெளிப்படுத்தி மனிதன் அந்த

வெளிப்பாட்டிற்கு ஏற்றாற்போல கீழ்ப்படிய வேண்டுமென்று எதிர்பார்க்கிறார். இதை நாம் யுகங்கள் என்று அழைக்கிறோம்.

2. வேறுபட்ட இந்த நிர்வாகங்களை (யுகங்களை) வேதத்தில் பிரியமுள்ள மாணவர்கள் அறிந்துகொள்வார்கள். வேதாகமத்தை தெளிவாக அறிந்துகொள்வதற்கு நியாயப்பிரமாணத்தையும் – கிருபையையும், இஸ்ரவேல் சபையையும் – புதிய ஏற்பாடு சபையையும், ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தங்களையும், புதிய ஏற்பாட்டிலுள்ள விசுவாசிகளுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்களையும், வேறுபடுத்திக் கற்றுக் கொள்ள வேண்டும்.
3. பாவத்தை நிவர்ப்பிப்பதற்கு கிறிஸ்துவின் இரத்தம் போதுமானது, வேறொருபலி தேவையில்லை என்று சொல்லக் கூடியவர்களும், சனிக்கிழமை அல்ல பிரதி ஞாயிறுதோறும் தேவனைத் தொழுது கொள்ளுகிறவர்களும், யுகவாதிகள் அதாவது வேதாகமத்தை யுகங்களின் அடிப்படையில் நம்புகிறவர்கள் என்று கூறலாம்.
4. வரலாற்று ரீதியில் யுகங்களும், காலங்களும் ஒன்றுக்கொன்று இசைந்திருக்கிறது (எபேசியர் 3:9–10).

## V. யுகங்களின் கொள்கைக்கும், படிப்படியாக வெளிப்படுத்தப்பட்ட வெளிப்பாட்டிற்கும் உள்ள தொடர்பு :

அ. வேதாகமத்தில் கொடுக்கப்பட்ட வெளிப்படுத்தல் படிப்படியாக வெளிப்படுத்தப்பட்ட ஒரு உண்மையாகும் என்று ஒரு யுகவாதி வாதிடுகிறார்.

ஆ. வேதத்தை யுகங்களின் அடிப்படையில் படிப்பது இந்த வெளிப்பாட்டை சரியாக அறிந்துகொள்ள உதவுகிறது.

**உதாரணங்கள் :**

i) "அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார், இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்" என்று பவுல் கூறுகிறார் (அப்போஸ்தலர் 17:30).

ii) நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது. கிருபையும் சத்தியமும் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின (யோவான். 1:17).

**குறிப்பு :**

பெர்னார்டு ராம் என்ற மேதை இவ்விதமாக எழுதியிருக்கிறார். அதாவது படிப்படியாக வெளிப்படுத்தப்பட்ட வெளிப்பாட்டைக் குறித்ததான சரியான தெளிவு யுகங்களின் கொள்கைக்கு பெருமளவில் பயன் கொடுக்கக் கூடியதாய் இருக்கிறது.

இ. ஒரு குறிப்பிட்ட காலத்தில் வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய சத்தியமானது அந்தக்காலம் நிறைவு பெறும்பொழுது அந்தச் சத்தியமும் நிறைவு பெற்று முடிந்து போவதில்லை. வெளிப்படுத்தப்பட்ட சத்தியமானது படிப்படியாக தொடர்ந்து பெருகி வருவதாய் இருக்கிறது.

**உதாரணம் :**

மனசாட்சியின் யுகம் (காலம்) இன்று இல்லை. ஆனால் இன்றைக்கும் மனிதர்கள் மனச்சாட்சி உடையவர்களாய் இருக்கிறார்கள் (ரோமர் 2:15;9:1,2; 2 கொரிந்தியர் 1:12;4:2). நியாயப்பிரமாணத்தின் காலம் முடிவடைந்து விட்டது. ஆனால் அதனுடைய சத்தியமானது முற்றுப்பெறவில்லை. இன்றைக்கும் பலன் தரக்கூடியதாய் இருக்கிறது (2 தீமோத்தேயு 3:16,17; ரோமர் 7:7; 15:4; கலாத்தியர் 3:19,24; 5:18).

## VI. யுகவாதிகளை குறைகூறுபவர்களுக்கு அளிக்கக்கூடிய விடைகள் :

அ. கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு மட்டும் இரட்சிக்கப்படாமல் வேறுவழியிலும் இரட்சிப்பு இருக்கிறது என்று யுகவாதிகள் நம்புவதாக குறைகூறுகிறார்கள்.

***பதில் :*** மேற்கூறப்பட்ட கருத்து உண்மையல்ல. அவர்கள் ஒருபோதும் இரட்சிப்பு வேறுவழியிலும் இருக்கிறது என்று நம்பினது இல்லை. தேவன் எப்பொழுதும் விசுவாசத்தின் அடிப்படையில் மட்டுமே பாவிகளை நீதிமான்களாகக் கணக்கிடுகிறார் (ஆதியாகமம் 15:6; கலாத்தியர் 3:6; எபிரெயர் 11:7, 13,14–28).

ஆ. யுகங்களின் கொள்கையானது பகுதி பகுதியாகப் பிரிக்கிறது. இவை எதிரிடையான விளைவுகளோடு வேதாகமத்தின் ஒற்றுமையை அழிக்கிறது என்று குறைகூறுகிறார்கள்.

***பதில் :*** யுகவாதிகள் வேதாகமம் பிழையற்றது, பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்பட்டது என்று நம்புகிறவர்கள். மேற்கூறப்பட்ட தன்மைகளை ஏற்றுக்கொள்ளாதவர்கள் முறையாக வேதத்தை போதிப்பவர்கள் அல்ல. மேலும் யுகவாதிகள் உபத்திரவகாலத்திற்கு முன்பு சபையை எடுத்துக்கொள்ள கிறிஸ்து வருவார்

என்றும், உபத்திரவ காலத்திற்குப் பிற்பாடு இந்த உலகத்தில் தம்முடைய இராஜ்யத்தை ஸ்தாபிப்பார் என்றும் நம்புகிறார்கள்.

இ. உயர்ந்த படிப்பு படித்து பட்டம் பெற்ற பிற்பாடு யுகங்களின் கொள்கைகளை அநேகர் எதிர்க்கிறவர்களாக மாறுகிறார்கள் என்று ஒரு கேள்வியை எழுப்புகிறார்கள்.

***பதில் :*** உயர்ந்த படிப்பு படித்து பட்டம் பெற்ற அநேகர் யுகவாதிகளாகவே இருக்கிறார்கள். கல்வித்தகுதி ஒரு மனிதனை நிகரற்றவனாகவும், பிழையில்லாதவனாகவும் உருவாக்குவதில்லை.

ஈ. வரலாற்று ரீதியின் அடிப்படையில் யுகங்களின் கொள்கை சரியானது அல்ல என்றும், இந்தக்கொள்கை நவீன காலத்திற்குரியது என்றும் சொல்லுகிறார்கள். இந்தக் கொள்கை குறுகிய காலத்திற்குள் பெயர் பெற்று விளங்குவதற்கு காரணமாய் இருந்தவர்கள் ஜான் நெல்சன், டார்பி, பிலைமவுத் சகோதரர்கள், ஸ்கோபீல்டு என்றும் கூறுகிறார்கள்.

***பதில் :*** ஆதித்திருச்சபையில் ஞானஸ்நானத்தால் இரட்சிப்பு என்ற தவறான போதனைகள் இருந்தன. இந்தப் போதனை பழமையாக இருப்பதினாலே சரியாக மாறிவிடுவதில்லை. அதுபோல ஒரு போதனை தற்காலத்தில் வந்ததினாலே தவறுதலாக மாறிவிடுவதுமில்லை. சத்தியம் சரியானது, தவறானது என்று வரலாறு நிதானிப்பது இல்லை. வரலாறு ஒருபோதும் சத்தியத்தை நிர்ணயிப்பது இல்லை. வேதவெளிப்பாட்டோடு ஒரு போதனையானது ஒத்திருக்கிறதா என்பதே பிரதான காரியம்.

## VII. யுகங்களின் கால அட்டவனை :

<u>குறிப்பு :</u>

இந்த கால அட்டவணையை கவனமாகப் படிக்கவும். வேதவசனங்களை வாசிக்கவும். இந்த வரைபடமானது ஒரு குறிப்பிட்ட காலத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள வெளிப்பாட்டிற்கு ஏற்றாற்போல மனிதன் பொறுப்புடையவனாய் இருக்கிறான் என்பதை வெளிப்படுத்துகிறது. இப்பாடத்தில் ஏழு யுகங்களை உங்களுக்கு முன்பாக வைத்திருக்கிறோம். ஒருவன் யுகவாதியாக மாறுவதற்கு இந்த ஏழு யுகங்களையும் கடைபிடிக்க வேண்டிய அவசியமில்லை. சிலர் இரண்டு, மூன்று அல்லது ஐந்து என்ற நிலையில் விசுவாசம் வைத்துள்ளனர். ஆனால் ஏழு யுகங்களையும் தெளிவாக வேறுபடுத்திக் காட்டமுடியும் என்பதே எங்களது நம்பிக்கை.

## VIII. 'யுகங்கள்' வரைபடம் :

<u>குறிப்பு :</u>

இந்த வரைபடத்தில் யுகத்தின் ஐந்து வகையான இயல்புகளையும் அதற்கு பொருத்தமான வேதவசனங்களையும் கொடுக்க முணைந்துள்ளோம். இந்த வரைபடத்தை தெளிவாகப் படித்து, கொடுக்கப்பட்ட எல்லா வேதவசனங்களையும் வாசிக்கவும்.

## IX. வேதத்தை யுகங்களின் அடிப்படையில் படிப்பதின் மதிப்பு :

அ. நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும், சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு, என்று அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவை உற்சாகப்படுத்துகிறார் (2 தீமோத்தேயு 2:15). வேதத்தை யுகங்களின் அடிப்படையில் படிக்கும் பொழுது வேதத்தின் உள்ளான பொருளை அறிந்துகொள்வதற்கு உதவுகிறது.

ஆ. வேதாகம மாணவர்கள் ஆபிரகாமுக்கு, தாவீதுக்கு, இஸ்ரவேல் தேசத்திற்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்களையும், சபைக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்களையும் வேறுபடுத்திக்காட்ட வேண்டும். வேதத்தை யுகங்களின் அடிப்படையில் படிக்கும் பொழுது சரியாக வியாக்கியானம் செய்யவும், வாக்குத்தத்தங்கள் யாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிந்து கொள்ளவும் உதவுகிறது.

இ. வேதத்தை யுகங்களின் அடிப்படையில் பகுத்துப் படிக்கும் பொழுது ஒரு குறிப்பிட்ட காலத்தில் தேவன் தம்மைக் குறித்து வெளிப்படுத்தியுள்ள சத்தியத்தையும், அதில் மனிதனுடைய பொறுப்பு என்ன என்பதையும் இலகுவாக அறிந்துகொள்ள முடியும். யுகங்களை பிரித்துப் படிக்கும்பொழுது மாத்திரமே தேவனுடைய முழுமையான நோக்கத்தை சரியாக அறிந்து கொள்ள முடியும்.

ஈ. பழைய ஏற்பாட்டையும், புதிய ஏற்பாட்டையும் வேறுபடுத்திக்காட்ட வேண்டுமென்று வேதபண்டிதர்கள் உணர்ந்திருக்கிறார்கள். வேதத்தை யுகங்களின் அடிப்படையில் படிக்கும்பொழுது இந்த வித்தியாசத்தை நன்கு அறிந்து கொள்ள முடியும்.

உ. ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை இஸ்ரவேல் ஜனங்கள் சுதந்தரிப்பார்கள் என்றும், கிறிஸ்து மறுபடியுமாக இந்த உலகத்திற்கு வந்து தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருந்து ஆயிரம்வருடம் அரசாளுவார் என்றும் யுகவாதிகள் நம்புகிறார்கள். ஆயிரம்வருடம் அரசாட்சி இல்லை என்று சொல்பவர்களும், இஸ்ரவேல் ஜனங்களுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்கள் அனைத்தும் சபைக்கும் பொருந்தும் என்று சொல்லக்கூடியவர்களும் மேற்கூறிய கருத்தை ஏற்றுக்கொள்வதில்லை.

**முடிவுரை :**

**யுகவாதி என்பவர் :**

1. சத்தியமானது படிப்படியாக வெளிப்படுத்தப்பட்டது என்பதை விசுவாசிப்பவர்.
2. வேதவசனம் பரிசுத்த ஆவியானவராலே கொடுக்கப்பட்டது, பிழையற்றது என்பதை விசுவாசிப்பவர்.
3. வேதவசனங்களை சரியாக, முறையாக வியாக்கியானம் செய்பவர்.
4. சரித்திரத்தில் தேவனுடைய நோக்கத்தையும், நித்தியத்தில் அவருடைய மகிமையையும் நம்புகிறவர்.

இப்படி இருப்பினும், நாம் ஒரு எச்சரிக்கை கொடுக்கவேண்டும். தீவிரமான யுகவாதிகள் தங்களின் தீவிர கண்ணோட்டத்தினால் இக்கொள்கைக்கு இழுக்கை கொண்டு வந்திருக்கிறார்கள். உதாரணம், இவர்கள் பழைய ஏற்பாட்டை ஒரு பொருட்டாக எண்ணுவது கிடையாது. மலைப்பிரசங்கம், மத்தேயு எழுதின சுவிசேஷம் ஆகிய இவைகள் இன்றைக்கு நமக்கு ஒன்றும் சொல்வதற்கு இல்லை என்று சொல்லுகிறார்கள். இது தவறு.

''வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது'' **(2 தீமோத்தேயு 3:16)**

என்பதை பெரும்பாலான யுகவாதிகள் உறுதியாய் நம்புகிறார்கள். வேதவசனங்கள் எல்லாம் நாம் கற்றுக்கொள்ளவும், அதன் மூலம் பலன்பெறவுமே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நாம் வெட்கப்படாத ஊழியக்காரனாயும், நம்மைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படியும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

**மாணவர் கவனத்திற்கு :**

1. வேகமாக இப்பாடத்தை மாத்திரம் படிப்பதினால் வேத அறிவோ அல்லது ஆவிக்குரிய வளர்ச்சியோ உண்டாகாது.
2. விடைத்தாள்களில் உங்கள் விடைகளை அளிக்குமுன்னதாக பாடத்தையும், கேள்விகளையும் தெளிவாகப் புரிந்து கொண்டீர்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

## வேதாகமத்தின் யுகங்கள்

*ஒவ்வொரு மாணவரும் பதில் அளித்து அனுப்ப வேண்டிய முகவரி*

*இயக்குனர், ரோக்மா இலவச அஞ்சல் வழிக் கல்வி, தபால் பெட்டி எண் - 9, மதுரை - 625 010.*

**[பூர்த்தி செய்த பின்பு விடைத்தாளை மட்டும் தனிப்படுத்தி தபாலில் அனுப்பவும்]**

### சரியான விடையை வட்டமிட்டு ○ காட்டவும்

1. ஒரு வேதாகம மாணவனுக்கு யுகங்களின் பாடம் எப்படி உள்ளது?

   a. ஜீவனுள்ள புத்தகமாக இருக்கும்

   b. பிரச்சனைகள் தெளிவடையும்

   c. சிறந்த ஆசிரியராக அல்லது கிறிஸ்தவராக மாற்றும்

2. யுகங்களின் கொள்கை என்றால் என்ன?

   a. பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள் புதிய ஏற்பாட்டில் நிறைவேறியதைப் பார்க்கிறோம்

   b. ஆதாம் முதல் கிறிஸ்து வரை உள்ள வெளிப்பாட்டை படிப்பதாகும்

   c. பழைய ஏற்பாட்டில் உள்ள முன்னடையாளங்கள் புதிய ஏற்பாட்டில் நிறைவேறியதை படிப்பதாகும்

3. 'Oikonomia' என்ற வார்த்தையை இரண்டு உவமைகளில் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து பயன்படுத்தியிருக்கிறார். எதற்கு தொடர்பான நிலையில் பயன்படுத்தப்பட்டுள்ளது?

   a. பொறுப்பு b. வாய்ப்பு c. சிலாக்கியம்

4. 1 பேதுரு 4:10–ல் 'Oikonomia' என்ற வார்த்தையை பேதுரு பயன்படுத்தியிருக்கிறார். இதனின் பொருள் என்ன?

   a. பொறுப்பு

   b. சிலாக்கியம்

   c. உக்கிராணத்துவம்

5. யுகங்களின் இயல்புகள் **நான்கை** வட்டமிடுக.

   a. தேவன் தம்மைக் குறித்து மனிதனுக்கு வெளிப்படுத்தின அந்தந்த காலத்துக்குரிய வெளிப்பாட்டிற்கு ஏற்றாற் போல மனிதன் நடந்து கொள்ள வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார்.

   b. தேவனின் வார்த்தைக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்கு சிலாக்கியமும் கொடுக்கப்படுகிறது.

   c. மனிதனுக்கு வெளிப்படுத்தப்பட்ட தேவ வெளிப்பாடும், பொறுப்பும் சேர்ந்தே காணப்படுகிறது

   d. மனிதன் தன்னுடைய பொறுப்பை நிறைவேற்றாமல் போகும் நிலையை ஒவ்வொரு யுகத்திலும் காணலாம்

   e. யுகங்களில் வெகுமதிகள் பெற்றதற்கான ஆதாரத்தைப் பார்க்கிறோம்.

   f. ஒவ்வொரு யுகத்திலும் மனிதன் தவறும் பொழுது ஆண்டவர் தண்டிப்பதையும் நாம் பார்க்க முடியும்.

6. யுகங்களில் வெளிப்படுத்தப்பட்ட சத்தியம் எப்படி அமைந்துள்ளது?

   a. இரட்சிக்கப்படுவதற்கு ஒரு புதிய வழியைக் காண்பிக்கிறது

   b. இது ஒரு குறிப்பிட்ட காலம் என்பதை குறிக்கிறது

   c. வெளிப்பாட்டின் சத்தியம் தொடர்ந்து பெருகி வருகிறதாக இருக்கிறது

7. ஒரு யுகத்தில் கொடுக்கப்பட்டுள்ள சத்தியம்

   a. அந்த யுகத்துக்கு மட்டும்

   b. மற்றொரு யுகத்துடன் சம்பந்தப்பட்டுள்ளது

   c. கிறிஸ்து வரும் வரைக்கும்

8. யுகங்களின் படிப்பு வாக்குத்தத்தங்களை வேறுபடுத்த உதவுகிறது. காரணம் என்ன?

a. வேதாகமத்தில் உள்ள அனைத்து வாக்குத்தத்தங்களும் விசுவாசிகளுக்கு சொந்தமானதாகும்

b. புதிய ஏற்பாட்டில் உள்ள வாக்குத்தத்தங்கள் மட்டும் விசுவாசிகளுக்கு சொந்தமானதாகும்

c. யாருக்கு வாக்குத்தத்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிந்து கொள்ள உதவுகிறது

9. தீவிரமான யுகவாதி என்பவர் யார்?

a. வேதாகமம் முழுவதும் தேவனால் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நம்புவது

b. பழைய ஏற்பாட்டையும், மத்தேயு சுவிசேஷ புத்தகத்தையும் குறைத்து மதிப்பிடுவது

c. வெளிப்படுத்தின விசேஷம் வேதாகமத்தின் ஒரு பகுதி என்று நம்புவதில்லை

10. பொருத்துக :– யுகங்களைக் குறித்து பவுல் போதித்த சில காரியங்களை எழுதுக. **(சரியான வசனத்தை வார்த்தைக்கு முன்பு எடுத்து எழுதவும்)**

| | | |
|---|---|---|
| -------- | இரகசியம் யாருக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறதோ அவர்களிடத்தில் உண்மையும் எதிர்பார்க்கப்படுகிறது | a. கலாத்தியர் 4:2–4 |
| -------- | யுகங்கள் காலத்தோடு தொடர்புடையது | b. 1 கொரிந்தியர் 4:1–2 |
| -------- | யுகங்கள் ஒரு குறிப்பிட்ட வெளிப்பாட்டோடு தொடர்புடையது | c. எபேசியர் 3:2–6 |

11. நிரப்புக :– கீழே உள்ள வாக்கியத்தை நிறைவு செய்யவும்

தேவன் தம்மைக் குறித்ததான -------------பல பகுதிகளாக பல்வேறு ----------- மனிதனுக்கு வெளிப்படுத்தினார். அந்ததந்தக் காலங்களில் கொடுக்கப்பட்ட -------------------- மனிதன் ------ ---------- இருக்கிறான்.

12. நிரப்புக :– கீழே உள்ள வாக்கியத்தை நிறைவு செய்ய, கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வார்த்தைகளில் சரியானதை தெரிவு செய்து எழுதவும். **(எடுத்து எழுத வேண்டிய வார்த்தைகள் :** சத்தியம், படிப்படியாக வெளிப்படுத்தப்பட்ட உண்மை, முழுமையான, வாய் மொழியான, பிழையில்லாத, பகுதியாக, சரியான, அடையாளமான)

a. ஒரு யுகவாதி வெளிப்படுத்தப்பட்ட சத்தியத்தை ------------------------------ என்று நம்புகிறார்.

b. ஒரு யுகவாதி மூல பாஷையில் எழுதப்பட்ட வேதாகமம் ------------------------------ என்று நம்புகிறார்.

c. ஒரு யுகவாதி ------------------------------ வேதாகம வியாக்கியானத்தை நம்புகிறவர்.

13. இந்த பாடத்தில் போதிக்கப்பட்டிருக்கும் யுகங்களின் கால அட்டவணையை வரிசைப்படுத்துக.

1. ------------------------------ 2. ------------------------------

3. ----------------------------- 4. -----------------------------

5. ----------------------------- 6. -----------------------------

7. -----------------------------

---

**அவசியமாக உங்கள் பெயரையும் முழு முகவரியையும் தெளிவாக எழுதவும்**

**பதிவு எண் :** ____________________

**முழு பெயர் :** ______________________________________________

**முகவரி :** ______________________________________________

______________________________________________